# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 3 | டிசம்பர் 1990 | இதழ் 12

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர்:-

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை
,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி
,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை
செவ்வாய் : மாலை 7-15—8-30...ஜெபக்கூட்டம் (மாதவக்காடு)
புதன் : மாலை 3-30—5-00. சகோதரிகள் ஐக்கிய கூட்டம் (ஒருவாரம்விட்டு ஒருவாரம்)
வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
சனி : மாலை 7-00—9-00...மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


1. ஒரு கிறிஸ்தவன் இரட்சிப்பை இழந்து விடும் அபாயம் உண்டா? 1-7
2. துன்பங்களும் வேதனைகளும் ஏன்? 8-11
3. தேவனால் கூடாதது உண்டோ 12-13
4. உன் பெற்றோரை கனம் செய்! 14-16
5. ஜெப வாழ்க்கையின் அவசியம் 17-18
6. யாத்திரகாமம் ஓர் கண்ணோட்டம் 19-23
7. தெரிந்து கொள்ளுங்கள் 24-25
8. பரிசுத்த வேதாகமத்தை ஏன் தினமும் வாசித்துத் தியானிக்க வேண்டும்? 26-28

# THIRUMARAI AASAAN

Editor
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J. C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India
Pleading for the restoration of pure New Testament Christianity :

Vol 3. Dec—1990 Issue 12

**ஆசிரியவுரை**

## ஒரு கிறிஸ்தவன் இரட்சிப்பை இழந்து விடும் அபாயம் உண்டா ?

உண்மையாகவே, இது ஒரு முக்கியமான, சிந்திக்க வேண்டிய கேள்வி. இதற்குப் பரிசுத்த வேதாகமத்திலிருந்து விடை காண முயலுவோம். அப்போஸ்தலனாகிய பவுலும், பேதுருவும், யோவானும், யாக்கோபும், யூதாவும் எழுதின நிருபங்கள் யாவுமே கிறிஸ்தவர்களுக்கு கூறப்பட்ட அறிவுரைகள் மற்றும் எச்சரிப்புகளே இந்தப் பரிசுத்த வேதாகம எழுத்தாளர்கள் ஒவ்வொருவருமே ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் கிறிஸ்தவர்கள் வீழ்ந்து போகும் அபாயத்தைக்குறித்து எச்சரித்துப் புத்தி சொல்லியிருக்கிறார்கள் இந்த எச்சரிப்புகள் சிலவற்றை வாசித்து தியானிப்போம்.

**''மரணத்துக் கேதுவான பாவத்துக்கானாலும் நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும் எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?''** (ரோமர் 6:16) இதில் பவுல் அப்போஸ்தலன் தெளிவாகச் சொல்லியிருப்பது என்னவெனில் : ஒரு கிறிஸ்தவன் மனப்பூர்வமாக பாவத்துக்கு அடிமையாகி விட்டால் மரணம் நிச்சயம் என்கிறார். மரணம் என்று இங்கே கூறப்படுவது சரீர மரணத்தையல்ல. தேவனிடத்திலிருந்து நம்மை சதாகாலத்துக்கும் பிரித்து வைக்கிற இரண்டாம் மரணத்தையே குறிக்கிறது. மேலும் ரோமர் 8:6ல் **''மாம்ச சிந்தை மரணம்; ஆவியின்**

**சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்'' என்கிறார், அப்போஸ்தலன் பவுல். இந்த எச்சரிப்பை கொரிந்தியருக்கு விடுக்கும் போது இன்னும் கொஞ்சம் அதிகக் கடுமையைக் கூட்டியிருக்கிறார். ''அநியாயக்காரர் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா?''** (1கொரி 6 ; 9) நினைவில் வையுங்கள், கொரிந்து பட்டணத்தில் இந்த நிருபத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் கிறிஸ்தவர்கள்.

ஒருமுறை இரட்சிக்கப்பட்டவர்கள் எந்த சூழ்நிலையிலும் மீண்டும் அதை இழந்து போவதில்லை என்று போதித்து, கிறிஸ்தவர்கள் தங்களுடைய எஞ்சிய வாழ்க்கையைக் கர்த்தருக்குப் பிரியமாய் வாழ வேண்டிய அவசியத்தை அலட்சியப்படுத்தத் தூண்டுபவர்கள், அப்போஸ்தலன் யூதா சொல்வதைக் கவனித்துப்படிக்க வேண்டுகிறேன். **''நீங்கள் முன்னமே அறிந்திருந்தாலும், நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறதென்னவெனில் கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து, பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார்''** (யூதா 5) இதைக்குறித்து பவுல் அப்போஸ்தலன் கொரிந்து பட்டணத்தாருக்கு எழுதிய நிருபத்தில், கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் செய்த மக்களை எவ்வாறு கர்த்தர் அழித்துப் போட்டார் என்று விளக்குகிறார் (1கொரி 10 : 1 - 10) அந்த நிகழ்ச்சி எல்லாக் காலத்துக் கிறிஸ்தவர்களுக்கும் எச்சரிக்கையாக இருக்கும்படி அதைக் கீழ்க்காணும் எச்சரிப்போடு முடிக்கிறார்.'' இப்படியிருக்க தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன். (1கொரி 10 : 12)

சுவிசேஷத்தைப் புரட்ட முயற்சி செய்கிற கிறிஸ்தவர்களின் கதி என்னவாயிருக்கும் என்பதைக் கலாத்தியர் நிருபத்தில் நாம் காண முடியும். **''நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல் நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப்பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.**

**முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன் நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்கு பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருப்பான்.** (கலா 1:8,9) கவனித்தீர்களா? பவுலாகட்டும், வேறு எந்த ஒரு அற்புதப்பிறவியாகட்டும் சுவிசேஷத்தைப் புரட்டினால் தேவனுடைய சாபத்துக்கு ஆளாவான் என்பது திண்ணம் என்று பவுல் அடித்துக்கூறுகிறார்.

தேவனால் சபிக்கக்கப்பட்ட ஒருவன் இரட்சிப்பின் பலனை அடைய முடியும் என்று இன்னும் நம்புகிறீர்களா? மேலும், சுவிசேஷத்தைப் புரட்டுகிறவர்கள் மட்டும் அல்ல; தேவனுடைய சுத்தக்கிருபையால் ஒரு முறை இரட்சிப்பு அடைந்த மக்கள் மீண்டும் நியாயப் பிரமாணத்துக்குத் திரும்பிப்போக விரும்பினால் அவர்களும் கூட சபிக்கப்பட்டவர்களே என்கிறார். ''நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் (கலா 5:4) இப்பொழுது சொல்லுங்கள், கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து போனவர்கள் இரட்சிப்பை இழக்க மாட்டார்கள் என்றால் பின்னர் யார் தான் இரட்சிப்பை இழந்து போவார்கள்?

மேலும், தங்கள் உபதேசத்தாலும், வாழ்க்கையாலும் கிறிஸ்துவினிடத்தில் அன்பும் மதிப்பும் இல்லாமல் கிறிஸ்தவ அறத்துக்கு இழுக்குண்டாக்கிக் கொண்டிருப்பவர்களைக் குறித்து பிலிப்பு பட்டணத்திலுள்ள சபையாருக்குப் பவுல் எழுதும்போது **''சகோதரரே, நீங்கள் என்னோடே கூடப் பின்பற்றுகிறவர்களாகி நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்.**

**ஏனெனில் அநேகர் வேறு விதமாய் நடக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுககு அநேகந்தரம் சொன்னேன். இப்பொழுது கண்ணீரோடும் சொல்கிறேன்.**

**அவர்களுடைய முடிவு அழிவு. அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலட்சையே. அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்** (பிலி 3:17-19) குறித்துக் கொள்ளுங்கள் : அவர்களுடைய முடிவு **அழிவு**

எபிரேய நிருபமும் கிறிஸ்தவர்கள் பாவத்திற்கும், அவிசுவாசத்துக்கும் ஆளாகி இரட்சிப்பை இழந்து விடக் கூடாது என்று எச்சரிக்கிறது. **''சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடி நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்''** (எபி 3;12) என்ன இப்படிச் சொல்கிறாரே, ஒரு கிறிஸ்தவன் ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான சாத்தியக் கூறுகள் உண்டாகுமா? என்று சந்தேகப்படுகிறவர்களுக்கு, கண்டிப்பாக அப்படி நடக்கும் என்று அடித்துக் கூறுவதுன்றி அப்படிப்பட்டவர்களுடைய கதி என்னவா-

யிருக்கும் என்றும் கூறுகிறார். "**ஏனெனில் ஒருதரம் பிரகாசிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும்.**

**தேவனுடைய நல்வார்த்தையையும், இனிவரும் உலகத்தின் பெலன்களையும், ருசி பார்த்தும்**

**மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து, அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதலுக்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்.''** (எபி 6:4-6)

சகோதரர்களே, இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிந்தே மறுபடியும் அவரைச் சிலுவையில் அறைந்து, பகிங்கிரமாக அவரை அவமானப்படுத்துகிற மக்கள் அவரோடு கூட நித்தியத்தில் பரலோக இன்பத்தைத் துய்ப்பார்கள் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள் எவ்வளவு அருவருப்பான காட்சி! மேலும், அதே நிருபம் "**சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு, நாம் மனப்பூர்வமாய் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்**

**நியாயத் தீர்ப்பு வரும் என்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்.**

**மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவர்கள் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே**

**தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்''** (எபி 10:26-29) என்று நம் சிந்தனையைத் தூண்டுகிறார். அன்பர்களே, மேற்கூறிய வசனங்கள் கிறிஸ்துவை அறியாத அஞ்ஞானிகளுக்குச் சொல்லப்பட்டதல்ல **நாம்**.. என்றிருப்பதால் இது கிறிஸ்தவர்களையே சுட்டுகிறது.

அப்போஸ்தலன் யாக்கோபு இந்த முக்கியமான விஷயத்தில் தன் நிலையை விளக்காமல் இல்லை. இப்படிப்பட்டவர்களை

பார்த்து, "விபச்சாரரே, விபச்சாரிகளே! உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்கு சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்" என்று சாடுகிறார் (யாக் 4:4) அப்படிப்பட்ட பகைவர்களை தேவன் தம்முடையவர்களாகக் கருதுவாரா? தவறு செய்கிற கிறிஸ்தவர்கள் மீண்டும் சத்தியத்துக்குத் திரும்பி வராவிட்டால் இழப்பு நிச்சயம் என்பதை மற்றுமொரு இடத்தில் யாக்கோபு கூறுகிறார் "சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தை விட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால் தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவான் என்று அறியக் கடவன்" (யாக் 5:19,20) ஆம் சகோதரரே! தவறு செய்கிற ஒருவனை மீண்டும் சத்தியத்துக்குள் கொண்டு வராவிட்டால் அவன் ஆவியிலே மரித்த நிலையில் இருப்பான் என்று அறிவோமாக!

புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களிலேயே, தெரிந்தே பாவஞ்செய்கிற கிறிஸ்தவர்களைக் கடுமையாகச் சாடுபவர் அப்போஸ்தலன் பேதுரு என்று சொல்லலாம். "ஆகையால், சகோதரரே, உங்கள அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். இவைகளைச் செய்தால் (அதாவது அதே அதிகாரம் 5 முதல் 9 வசனங்களில் சொல்லப்பட்டுள்ளவைகளைச் செய்தால்) நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை.

இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்ஜியத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2 பேதுரு 1:10,11). இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை என்பதை வேறு விதமாகச் சொன்னால், இவைகளைச் செய்யாவிட்டால் நீங்கள் இடறி விழுவீர்கள் என்றாகிறதில்லையா? மறுதலித்துப் போகிற கிறிஸ்வர்களை "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்கு தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால் அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமைகளிலும் கேடுள்ளதாயிருக்கும்.

அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டுப் விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்.

**நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளுவதும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது.** (2 பேதுரு 2:20-22). அப்போஸ்தலன் தான் சொல்ல வந்த கருத்தை வலியுறுத்துவதற்காக அவர் சாதாரண சூழ்நிலையில் சொல்லக் கூச்சப்படக் கூடிய ஒரு பழமொழியை மேற்கோள் காட்டி, சத்தியத்தை அறிந்த பிறகு தவறு இழைக்கிற மக்களின் அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

இது விஷயத்தில் அப்போஸ்தலன் யூதாவும் மௌனமாயிருக்கவில்லை ''வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை நிறுத்தவும் வல்லமையுள்ளவரும் தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும், வல்லமையும், அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக, ஆமென்.'' (யூதா 24, 25)

ஆம், சகோதரரே, நாம் அவருக்கு ஒப்புக் கொடுத்து வாழ்வோமானால் அவர் நம்மை வழுவாதபடி காத்துக் கொள்ள வல்லவராக இருக்கிறார்.

அப்போஸ்தலன் யோவானும் இது விஷயத்தில் இவர்களுடைய கருத்தை ஆமோதித்துக் கீழ்வருமாறு எழுதுகிறார். ''அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், அவருடைய கற்பனைக்கைக் கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான்; அவனுக்குள் சத்தியமில்லை.'' (1 யோவான் 2:4) அப்படிப் பொய் சொல்லித் திரிகிறவர்களுக்கு என்ன சம்பவிக்கும் என்று அவர் வேறு ஒரு இடத்தில் கூறுகிறார், கேளுங்கள். ''பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகர்களும், விக்கிரக ஆராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்'' (வெளி 21:8)

சகோதரர்களே, மேலே எடுத்து ஆளப்பட்ட வேத வசனங்களையெல்லாம் வாசித்துச் சிந்தித்த பிறகு, கிறிஸ்துவை மறு-

தலித்து மீண்டும் அவரைச் சிலுவையில் அறைந்து அவரை பகிரங்கமாக வெட்கப்படுத்துகிற போலிக் கிறிஸ்தவர்கள் மீது தேவன் பிரியமாய் இருக்கமாட்டார் என்று ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

ஒப்புக் கொள்வதோடு நின்று விடாதீர்கள். உங்கள் வாழ்க்கையை செப்பனிடவும், அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும், உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படவும் கிறிஸ்தவ அன்புடன் வேண்டி, மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

E. Z. செல்வநாயகம்

---

**இளைய சமுதாயமே, கேள்!**

வாலிபனே, உன் இளமையிலே சந்தோஷப்படு; உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி.

நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாமிசத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு, இளவயதும், வாலிபமும் மாயையே.

நீ உன் வாலிபப்பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை.

# துன்பங்களும் வேதனைகளும் ஏன்?

துன்பங்களும், வேதனைகளும் ஏதோ ஒரு சிலருக்குத் தான் வருகிறது என்றில்லை. உலகத்தில் பிறந்த ஒவ்வொருவனும், அவன் ஏழையோ, செல்வந்தனோ ஏதாவது ஒரு வகையில் இவைகளால் பாதிக்கப்படுகிறான். இவைகள் ஏன் வருகின்றன என்பதைச் சரியாகப் புரிந்து கொண்டு அதைச் சமாளிப்பதற்கான யுக்திகளை நாம் மேற்கொள்ளாவிட்டால், இவைகள் நம்முடைய வாழ்க்கையை அதிகமாகப் பாதித்து விடும்.

நமக்கு ஏற்படுகிற துன்பங்களையும், வேதனைகளையும் நாம் எப்படி எடுத்துக் கொள்கிறோம்? பலர், துன்பங்களும் வேதனைகளும் கடவுளால் தான் உண்டாகிறது என்று நினைத்துக் கொண்டு அவரைக் குறை கூறுகின்றனர். கடவுள் ஏன் யுத்தங்கள் நடக்க அனுமதிக்கிறார்? பஞ்சத்தை ஏன் வர விடுகிறார்? இன்னும் இயற்கைச் சீற்றங்களால் மனுக்குலத்துக்குப் பல நாச மோசங்களை ஏன் ஏற்படுத்துகிறார் என்று கேள்விக் கணைகளைத் தொடுக்கிறோம்; சலித்துக் கொள்கிறோம். ஆனால் உண்மை என்னவென்று சிந்தித்துப்பார்த்தால், பெரும்பான்மையான துன்பங்களும், வேதனைகளும் சம்பந்தப்பட்டவர்களுடைய தவறுகளினாலே உண்டாகிறது என்று அறியலாம்.

உதாரணமாக, ஒருவன் கண்டதையெல்லாம் சாப்பிடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனுக்கு வயிற்றுக் கோளாறு ஏற்பட்டு, பலவிதமான நோய்கள் வரத்தானே செய்யும்! வேறொருவன் மது, போதை மருந்துகள் ஆகியவற்றை அளவுக்கு மீறி சாப்பிட்டு, லாகிரி வஸ்துக்களை உபயோகித்தால் நாளடைவில் அவனுக்குப் பலவிதமான வியாதிகள் உண்டாகி முடிவில் உயிர் இழப்பு ஏற்படத்தானே செய்யும்! ஒருவன் கவனக் குறைவாகவும் அதிவேகமாகவும் வாகனங்களை ஓட்டிச் செல்லுகிறான் என்று வைத்துக் கொள்வோம் என்ன ஆகும்? அவனும் விபத்துக்குள்ளாகி மற்றவர்கள் உயிரையும் வாங்கிடுவான். அதே போன்று சூதாட்டம் போன்ற மோசமான தீய பழக்கமுடையவர்கள், ஒரு கட்டத்தில் அதற்கு அடிமையாகி, பெண்டு பிள்ளைகளின் நகை நட்டுகள், சொத்து பத்துகளையெல்லாம் இழந்து தவிப்பார்கள். வேசித்தனம் பண்ணி, விபசாரத்தில் ஈடுபட்டு, தகாத உடலுறவுகளில் ஈடுபடுகிற ஒருவன் பல கொடிய நோயகளுக்கு ஆளாகி துர்மரணம் அடைவான் அல்லவா! இப்படி எத்தனையோ சொல்-

லாம். காரியம் என்னவென்றால், துன்பங்களும், வேதனைகளும் ஏற்படுவதற்கு மனிதனுடைய மதியீனம், ஒழிக்கக் கேடு, பாவம் ஆகியவைகளே பெரும்பாலும் காரணங்களாக இருக்கின்றன. அதனால் தான் அப்போஸ்தலன் பவுல் **''பாவத்தின் சம்பளம் மரணம்''** என்று எழுதுகிறார் (ரோமர் 6:23)

சரி, அப்படியானால் யுத்தத்துக்கு யார் காரணம்? ஒரு பாவமும் அறியாத பச்சிளங் குழந்தைகள் கைவிடப்பட்டு துன்பப்படுகிறதே, அதற்கு யார் காரணம்? என்று கேட்கத் துடிக்கிறீர்கள். யுத்தத்தை ஆரம்பித்தது யார்? பேராசை கொண்ட, பொறாமை உள்ளம் கொண்ட, தான் தான் எல்லாம் அகம்பாவம் கொண்ட ஒரு, அல்லது சில மனிதர்கள் தானே! பச்சிளம் குழந்தைகள் படும் அவஸ்தைக்கு யார் காரணம்? தங்கள் சரீர இச்சையையே பிரதானமாக நினைத்துக் கொண்டு பின் விளைவுகளைப் பற்றி எண்ணமில்லாமல் வாழுகின்ற பொறுப்பற்ற பெற்றோர்கள் அல்லவா? அதற்கு தேவனா பொறுப்பு? அப்படிப்பட்ட பொறுப்பற்ற ஜீவன்களை கடவுள் ஏன் வாழ அனுமதிக்கிறார்? தேவன் பார்த்து மனிதர்கள் இப்படித் தான் வாழ்ந்தாக வேண்டும் என்று கட்டாயச் சட்டம் போடலாமல்லவா? என்றெல்லாம் கேட்பீர்கள்.

நாம் நினைக்கிறபடி, தேவன் கட்டாயச் சட்டம் போட்டு நிர்ப்பந்தித்தால், ஒரு வேளை இவ்விதக் கேடுபாடுகள் நடக்காமல் தடுக்கலாம். ஆனால் தேவன் ஒரு காலத்திலும் மனிதன் மீது தன் அதிகாரத்தைப் பிரயோகித்து அவனைப் பணிய வைத்ததே கிடையாது. அப்படிச் செய்வதை பெரும்பான்மையான மக்கள் விரும்பவும் மாட்டார்கள். சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒரு காரியம் நன்மையாக இருக்கும் வரையில் மகிழ்ச்சியாயிருப்பார்கள். அவர்களுக்கு அது பாதகமாக மாறும்போது கலகம் செய்யத் தொடங்கி விடுவார்கள்.

அது சரி, இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் விபரீதங்களினால் ஏராளமான பேர், மரணம் அடைந்தும், சொத்துக்கள் இழந்தும் பரிதவிப்பது மனிதனால் உண்டாவதில்லையே, அதற்கு தேவன் தானே காரணம் என்பீர்கள். நிச்சயமாக, இவைகளுக்குக் கூட தேவன் நேரடியாகப் பொறுப்பில்லை.

தேவன் பூமியையும், வானத்தையும், அதிலுள்ள யாவற்றையும் படைத்தார் என்பது உண்மை தான். இயற்கையெல்லாம் அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறது என்பதும் உண்மையே ஆனால் அவைகள் படைக்கப்பட்ட பொழுது, மனுக்குலத்துக்குக்

கெடுதி செய்வதற்கென்று படைக்கப்படவில்லை. பின்னர் மனிதன் பாவம் செய்த பொழுது, அதற்கு அளிக்கப்பட்ட தண்டனையின் ஒரு பகுதியாக இயற்கையின் தன்மைகளும் மாற்றப்பட்டன. உதாரணமாக, ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த பிறகு, தேவன் பூமியைச் சபித்தார். அது அவனுக்கு முள்ளையும் குறுக்கையும் முளைப்பிக்கும். மனிதன் வாழ்நாளெல்லாம் நெற்றி வேர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டுத் தனக்கு வேண்டிய ஆகாரத்தைத் தேடிக்கொள்ள வேண்டியதாயிற்று (ஆதி 3:17-19) மனிதனுடைய பாவம் இயற்கையின் மீதும், தட்பவெட்ப நிலைகளின் மீதும் பல வேறு மாற்றங்களை உண்டாக்குவதால் மழை, காற்று ஆகியவை கணை ஏற்படுத்துகிறது. அவைகள் ஒரு வரம்பை மீறும் போது புயலாகவும், ஜலப்பிரளமாகவும் மாறி அழிவை உண்டாக்குகிறது. (ஆதி 6, 7) இருந்த போதிலும், மனிதன் கவனமாகவும், விழிப்புடனும் இருந்தால் இந்த பாவங்களுக்குத் தப்பலாம்.

மரணத்தை எடுத்துக் கொண்டாலும் சரி. அது கூட இயற்கை நியதிகளுக்கு உட்பட்டே சம்பவிக்கிறது. அது சம்பந்தப்பட்டவர்களுக்கு பெரும் இழப்பையும், துக்கத்தையும் கொடுக்கிறது என்பது உண்மையே. இதுவும் ஆதாம், ஏவாளின் கீழ்ப்படியாமையினால் விளைந்த பாவத்தின் இறுதி நிலையே. (ஆதி 3ம் அதிகாரம்) ஆகவே துன்பங்களுக்கும், வேதனைகளுக்கும் தேவன் காரணர் அல்லர் **''சோதிக்கப்படுகிற எவனும், தான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல; ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல.''** (யாக் 1:13) என்பது வேதவாக்கு. பாவத்தின்விளைவுகளை உற்றுக் கவனித்து அது தரும் பாடங்களைச் சிந்தித்துப் பார்த்துத் தெளிவடைவோம், புரிந்து கொள்வோம், பயன் அடைவோம்.

நமக்கு எந்தத் துன்பமும் வரக் கூடாது. மற்ற எவரும் துன்பப் படக் கூடாது. என்பது நல்ல எண்ணம்; ஆனால், தேவன் ஒருக்காலும் மனிதனைத் துன்பத்தினால் சோதிப்பதில்லை. துன்பங்கள் அனைத்துக்கும் நாமே காரணம். அது நம்முடைய வாழ்க்கையில் ஒரு அம்சம். ஆகவே அத்துடன் நாம் வாழ்ந்து பழகிக் கொள்ள வேண்டும். அல்லது அதோடு போராடி வெற்றி கொள்ள வேண்டும். அதனால் தான் நாம் கடவுளை அண்டிக் கொண்டு அவருடைய ஒத்தாசையைப் பெற்றுக் கொள்ள முயற்சி வேண்டும் என்று வேதாகமம் அறிவுறுத்துகிறது. **''கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்''**

சங் 55:22 அவருடைய உபதேச சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் இம்மையில் சமாதானமும், இரட்சிப்பும் பெற்று, மறுமையில் துக்கமும், கண்ணீரும், மரணமும் இல்லாத நித்தியஇராஜ்ஜியத்தைச் சுதந்தரித்துக் கொள்ள முடியும்.

நண்பனே, சகோதரியே! கிறிஸ்தவ அறமே இம்மை வாழ்வை வளமாக்கும் சிறந்த அறம். மறுமையில் மகிழ்ச்சியையும், பேரின்பத்தையும் வழங்கும் நித்திய வீட்டுக்கு அழைத்துச் செல்லும் அறமும் அதுவே. துன்பத்தையும், வேதனையையும் கண்டு அஞ்சி வெறுப்பையும் நாம் அவைகளினால் சில நன்மைகளும் உண்டென்பதையும், ஒப்புக் கொண்டாக வேண்டும். உதாரணமாக நம்முடைய உடலில் ஏதோ ஒருவிதமான வலியும், சோர்வும் இருந்தால், ஏதோ கோளாறு என்று அறிந்து கொண்டு, அதற்குத்தேவையான மருத்துவம் செய்து சீர்படுத்திக் கொள்கிறோம். அதை விட முக்கியமான நன்மை என்னவெனில், நமக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்சனையைத்தைக்க அவரிடம் மன்றாடி ஜெபிக்க ஏவப்படுகிறோம். இவ்வுலகையில் துன்பமும் வேதனையும் நம்மைப் படைத்த இறைவனிடம் நாம் கிட்டிச் சேரத் துணை புரிகின்றன. இது மிகப்பெரிய நன்மை அல்லவா?

முடிவாக, எந்த ஒரு காரியத்திலும் நன்மை, தீமை ஆகிய இரண்டு இயல்புகளுமே கலந்தே இருக்கின்றன. நாம் துன்பங்களையும், வேதனைகளையும் தாங்கிக்கொண்டு, அவைகளினாலே நாம் சில நல்ல இயல்புகளைக் கற்றுக் கொள்வோமாக!

**''அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்,''** என்னும் பவுலடியாரின் கருத்துக்களைச் சிந்தித்து ஆறுதலடைவோமாக!

**J. C. சோட்**

# தேவனால் கூடாதது உண்டோ

பிரச்சனைகள் நிறைந்த ஒரு உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எல்லா மனிதர்களுக்கும் பிரச்சனைகள் இருக்கின்றன. அநேக சமயங்களில் அடுக்கடுக்கான பல பிரச்சனைகள் நம்மை அமுக்கிப் போடும் அளவிற்கு அவதாரம் எடுக்கும் போது அவநம்பிக்கையில் நாம் ஆழ்ந்து போகிறோம். தேவன் இத்தகைய சோதனைகளை நமக்கு ஏன் அனுப்புகிறார் என அடிக்கடி நொந்து கொள்ளுவதுடன், சில வேளைகளில் அவர் மேல் குற்றஞ் சுமத்தி வெறுப்போடு அவரை விட்டு விலகிப் போவதுமுண்டு.

நமது தவறான எண்ணங்களே இத்தகைய வெறுப்புக்குக் காரணம் என்பதை நாம் உணர வேண்டும். துன்பங்களை நாம் சந்திக்கும் வேளைகளில் தேவனை விட்டு ஓடுவதை விடுத்து விசுவாசத்தோடு அவரைப் பற்றிக் கொள்ள வேண்டியது நமக்கு அவசியமாகிறது. நாம் அவரைப் சார்ந்திருப்போமானால், அவர் நமது துயரங்களைத் துடைக்கும் வல்லவராயிருக்கிறார் என்ற உண்மையை உணருவோம்.

புதிய ஏற்பாட்டில் குறைந்தபட்சம் ஆறு இடங்களிலே "அவர் வல்லவராயிருக்கிறார்" என்பதற்கான வசனப் பகுதிகளைக் காணலாம். இப்பகுதிகளை நமது வேதாகமப் புத்தகத்திலே அடிக்கோடிட்டு, அல்லது மனப்பாடம் செய்து கொண்டு, ஆபத்து வேளைகளில் நமக்கு உதவியாக அமைய அவற்றை நினைவு கூர்ந்து ஆறுதல் அடைவோமாக!

**அப்போஸ்தலர் பவுல் எழுதுகிறார் "நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு.." (எபே 3:20)**

**"....ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன் நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறார்" (2தீமோ 1:12)**

**"அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத் தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே" (பிலிப் 3:21)**

எபிரேயர் நிருபத்தின் ஆசிரியர் எழுதுவதைப் பாருங்கள் **''ஆதலால், அவர் தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதி-னாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்''** (எபி 2:18)

**''மேலும் தமது மூலமாய் தேவனிடத்தில் சேரு-கிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்-களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்-கிறார்''** (எபி 7:25)

அப்போஸ்தலர் யூதா எழுதுகிறார் **''வழுவாதபடி உங்-களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்-திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர் களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும்''** (யூதா 24)

நாம் கேட்பதற்கும் அல்லது நமது தகுதிக்கும் மேலாக நமக்கு உதவியளிக்க கிறிஸ்து வல்லவராயிருக்கிறார். நம்மை பா-தாளத்தில் தள்ளி விட பயமுறுத்தும் பிரச்சனைகளினின்று மீளவும், சோதனைகளை வெல்ல நமக்குப் போதிய பலமளிக்கவும், உதவி செய்ய அவர் வல்லவராயிருக்கிறார்.

மேலும் நமது எல்லா பாவங்களையும் தவறுகளையும் மன்-னித்து நம்மை பரிசுத்தவானாக்கும் வல்லமை படைத்தவராயிருக்-கிறார்.

நமது எல்லா போராட்டங்களிலும் தேவன் நம்மை தனித்து விட்டு விடுவதில்லை. **உலகத்தின் முடிவுபரியந்தம் சகல-நாட்களிலும் அவர் நம்மோடு கூட இருக்கிறார்''** (மத் 28:20) நமது வாழ்விலே அவர் நடத்தி வரும் சகல வல்லமை-யான செயல்களையும் அறிந்து, ஏற்றுக் கொள்ள அவர் நம்மை அழைக்கிறார். தேவனின் வல்லமைகளை புரிந்து அவரை ஏற்றுக் கொள்வோமா?

**எஸ். எஸ். ராஜன்.** **டாம் கெல்டன்**

# உன் பெற்றோரை கனம் செய்!

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற அரிச்சுவடியின் ஆரம்ப அறிவுரையை நம்மில் அறியாதவர் யார்? ஒரு குழந்தையைப் பெற்று, சீராட்டி வளர்த்து, ஆளாக்கி, இவ்வுலகில் அறிமுகப்படுத்துவது பெற்றோர்கள் தானே! எனவே தான் அவர்களை 'முதற் கடவுள்' எனக் கூறுகிறது. இம் முதுமொழி கூறும் 'முதற் கடவுள்' என்பது பெற்றோர்களுக்கு முதல் இடம் கொடுக்க வேண்டும் என்பதைச் சுட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் சொல்.

பெற்றோர்களின் பால் பிள்ளைகளுக்குள்ள கடமைகள் பற்றி வேதாகமம் கூறுவது என்ன? பெற்றோர்களை கனம் பண்ண வேண்டிய கடமை ஒவ்வொரு பிள்ளைக்கும் உண்டு! "பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ் நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக" (எபே 6:1-3). இவ்வசனங்கள் சில காரியங்களை நமக்குத் தெளிவு படுத்துகின்றன.

**1. வாலிபத்தில் உன் பெற்றோருக்குக் கீழ்ப்படி :-** பிள்ளைகளின் மேல் அன்பு செலுத்துவதற்கு மட்டும் அல்ல; அதிகாரம் செலுத்துவது கூடப் பெற்றோருக்குத் தேவனால் கொடுக்கப்பட்ட சிறப்பு அதிகாரம். ஏனெனில் அவர்கள் வாழ்க்கையில் கற்றுக் கொண்டவைகளும், வயதின் காரணமாகப் பெற்ற பல அனுபவங்களும் பிள்ளைகளின் நல் வாழ்வுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். மேலும் பிள்ளைகளைப் பெற்று, பலசிரமங்களுக்கிடையிலும் அவர்களை வளர்த்து, பாதுகாப்பு அளித்து வருவதால், பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியது இன்றியமையாத கடமையாகிறது.

பெற்றோரை எதிர்த்துப் போர்க் கொடி தூக்கும் பிள்ளை மார்பில் பாயும் வளர்த்த கடாவுக்குச் சமம் ஆவான். அவனுக்கு ஐயோ! அப்படிப்பட்டவன் தன்னுடைய சொந்த நலனுக்கு எதிராகவும் தன்னுடைய பெற்றோர்களுக்கு விரோதமாகவும், தேவனுக்கு விரோதமாகவும் பாவம் செய்தவனாகிறான். (லூக் 15:16)

**2, உன் பெற்றோருக்கு மதிப்பும், மரியாதையும் கொடு:**

நமது பெற்றோருக்கு எப்பொழுதும் நாம் கடன்பட்டவர்களாக இருக்கிறோம். "பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக்

கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். (எபே 6:1) பெற்றோரைக் கனம் பண்ணு" என்பது பத்துக் கட்டளைகளில் ஒன்று. மனிதப் பிறவியிலேயே ஒருவனுடைய பெற்றோர்களை விட அதிக மரியாதைக் குரியவர்கள் எவருமிலர். நமது வயது ஆறானாலும் சரி; அறுபது ஆனாலும் சரி, நமது பெற்றோருக்கு மரியாதை செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

**3. வயதான உன் பெற்றோர்களுக்கு சகல உதவிகளையும் செய் :** உன் வயதான பெற்றோர்களின் பேரில் அன்பு செலுத்தி, அவர்களுக்குத் தேவையான பண உதவி மற்றும் பிற உதவிகளையும் அளிப்பது உன் கடமையாகிறது. ''விதவையானவளுக்குப் பிள்ளைகளாவது, பேரன் பேத்திகளாவது இருந்தால், இவர்கள் முதலாவது தங்கள் சொந்தக் குடும்பத்தைத் தேவ பக்தியாய் விசாரித்து, ''பெற்றோர் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்யக் கற்றுக் கொள்ளக் கடவர்கள்.'' (1 தீமோ 5:4) என்பது தேவ ஆலோசனை. ''ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத்தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்'' (1 தீமோ 5:8) தனது வயதான பெற்றோர்களின் பாலுள்ள தனது கடமைகளைச் செய்ய மறுக்கும் பிள்ளைக்கு ஐயோ!

**ஏன் உன் பெற்றோர்களை மதிக்கவும் அவர்களுக்குக் கீழ்ப்படியவும் வேண்டும்?**

ஏனெனில், தேவன் அவ்வாறு கட்டளையிட்டுள்ளார்.

நமக்கு வாழ்வு அளித்தவர்கள் அவர்களே.

நாம் சக்தியற்றவர்களாக இருந்த போது நம்மைப் பராமரித்தவர்கள்.

தங்களுடைய சொந்த மகிழ்ச்சி, ஓய்வு உலகப் பொருட்கள் யாவற்றையும் நமக்காகத் தியாகம் செய்தவர்கள்,

நாமும் ஒரு நாள் வயதான பெற்றோர்களாக மாறும் காலம் வரும். நாம் எந்த விதைத் தோமோ அதையே அப்பொழுது அறுவடை செய்வோம்.

உங்கள் பெற்றோர்கள் வயதான காலத்தில் துன்பமும் வேதனையும் அனுபவிப்பதைக்கண்டு கொள்ளாமல் அலட்சியு-

மாகவும், வெறுப்பாகவும் இருந்து விட்டு, மரித்த பிறகு உன் செல்வாக்கை உலகுக்குக் காட்டும் வகையில் மலர் அஞ்சலி செலுத்தி, ஊரைக் கூட்டி ஒப்பாரி வைத்து மாயம் பண்ண வேண்டாம்.

அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே அவர்களை அன்புடன் உபசரித்து அவர்களுக்குத் தேவையான எல்லா உதவி-களையும் செய்யுங்கள். நீங்கள் அவர்களை நேசித்து நன்றிக் கடன் காட்டுகிறீர்கள் என்று அவர்கள் அறியும் போது, அவர்கள் ஆறுதல் அடைந்து உங்களை ஆசிர்வதிப்பார்கள். அதைப் பார்த்துக் கொண்டிருக்கிற உங்கள் பிள்ளைகள் நீங்கள் வயோதிகம் அடைந்து, பராமரிப்புக்காக அவர்களை எதிர்பார்க்கும் போது தப்பாமல் உங்களுக்கு உதவுவார்கள்.

ஜான் வேடி

## வேதாகமத்திலேயே சிறிய அதிகாரம் இதோ !

**சங்கீதம் 117**

1. ஜாதிகளே, எல்லாரும் கர்த்தரைத்துதியுங்கள் ஜனங்களே, எல்லாரும் அவரைப் போற்-றுங்கள்.
2. அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது, கர்த்தரின் உண்மை என்றைன்றைக்குள்ளது அல்லேலூயா.

# ஜெப வாழ்க்கையின் அவசியம்

"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது". (1தெசலோ 5:17,18)

தனது அன்றாட நடவடிக்கைகள் யாவற்றையும் ஜெபத்துடன் தொடங்க மனிதனுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. சகலவற்றையும் படைத்த தேவனோடு ஆவிக்குரிய உறவை வளர்த்துக்கொள்ள மனிதனுக்கு ஜெபம் அவசியத்தேவை. நமது பாவ அறிக்கை, விண்ணப்பங்கள், வாழ்த்துதல், வணங்குதல், நன்றி செலுத்துதல் இவை யாவும் ஜெபத்தில் அடங்கும்.

ஜெப வாழ்க்கை மனிதனுக்கு இடப்பட்ட கட்டளை என்பது அல்லாமல், கிறிஸ்துவே ஜெப வாழ்க்கையைக் கடைபிடித்து வழி காட்டியிருக்கிறார் (யோவான் :17) தனது பரலோக தந்தையிடம் இயேசு விண்ணப்பித்தபோது, "வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்" (யோவான்-17:26) என ஜெபிக்கிறார்.

ஜெபம் செய்ய சரியான வழி பற்றியும், தவறான முறை பற்றியும் வேதாகமம் கூறுகிறது. லூக்கா எழுதிய சுவிசேஷத்தில் 18:9முதல் 14வசனங்கள் வரை காணப்படும் பரிசேயன், ஆயக்காரன் உவமையானது ஒரு உதாரணமாகும். இவர்கள் இருவரும் செய்த ஜெபங்களில் இவர்களுடைய மனநிலையும், குணங்களும் வெளிப்பட்டன. தனியாக அல்லது கூட்டாக ஜெபம் செய்யும் போது எப்படி, எதற்காக ஜெபம் செய்கிறோம் என்பதில் கவனமாக இருப்போம்.

நமது அன்றாட அலுவல்களில் ஜெபத்துக்கும் ஒரு இடமளிப்போம். அன்றைய நாளிலே, அப்போஸ்தலர்கள் போதித்த நற்செய்திகளை ஏற்றுக் கொண்டவர்கள், கீழ்ப்படிந்து கிறிஸ்தவரானார்கள். அவர்களுடைய தினசரி வாழ்க்கையில் ஜெபமும் அங்கம் வகித்தது "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோன்னியத்திலும், அப்பம் பிட்குதலிலும், **ஜெபம் பண்ணுதலிலும்** உறுதியாய்த் தரித்திருந்தார்கள்". (அப் 2:42)

மனிதர்களின் கவனத்தை கவரவேண்டும் என்பதற்காக மட்டும் ஜெபம் செய்வது தவறு. தேவனின் பிள்ளைகள் என்ற

முறையில், நமது வழி நடத்துதலுக்காகவும், ஆவியில் பலப்படவும்,
பாவங்கள் மன்னிக்கப்படவும் தேவனிடத்தில் ஜெபங்களை ஏறெ-
டுத்தல் வேண்டும். (யாக் 5 ; 15.16). வாலிபனான பிரசங்கி
தீமோத்தேயுவுக்கு ஜெபம் செய்வது பற்றிய தெளிவான வழிமுறை
களை, அப்போஸ்தலன் பவுல் எழுதினார். ''நான் பிரதானமாய்க்
சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்-
ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்
திரங்களையும் பண்ண வேண்டும்'' (1தீமோ 2:1). மேலும்
பவுல் அப்போஸ்தலர் கூறுவதைக் கவனிப்போம்; ''அன்றியும்
புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை
உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டுமென்று
விரும்புகிறேன்.'' (1தீமோ 2:8)

தனிப்பட்ட மனிதர்களாயினும், குடும்பங்களாயினும், தே-
வனின் சபை மக்களாயிருப்பினும், நமது வாழ்வில் ஜெபத்தின்
முக்கியத்தை உணர்ந்து செயல்படுவோம்.

வில்லியம் ஜோன்ஸ்

SSR.

## புத்தியுள்ள ஆராதனை

நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவ
னுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க
வேண்டும் என்று, தேவனுடைய இரக்கங்களை முன்-
னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

(ரோமர் 12:1)

## நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்

நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் கர்த்தத்
துவம் அவர் தோளின் மேல் இருக்கும்; அவர் நாமம்
அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள
தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்.

# யாத்திராகமம் ஓர் கண்ணோட்டம்

ஆதியாகமத்தின் தொடர்ச்சியாகவும், வேதாகமத்தின் இரண்டாவது நூலாகவும் அமைந்து இருப்பது யாத்திராகமம். யாத்திராகமம் என்பதற்குப் பயணநூல் என்று பெயர். (யாத்திரை + ஆகமம்) இது இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய பலத்த கரத்தினால் எகிப்தின் அடிமைத்தனையிலிருந்து விடுவிக்கப்பட்டு மோசே முனிவரின் தலைமையில் அவர்களுடைய முற்பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இன்பக் கானானை நோக்கி மேற்கொள்ளப்பட்ட பயணத்தை விவரிக்கிறது. இதன் தலைப்பு நூல் முழுவதற்கும் பொருந்தாது எனினும் ஆரம்பக் கட்டத்துக்குப் பொருத்தமானதே.

இந்நூல் எகிப்தில் சுமார் 430 ஆண்டுகள் வாழ்ந்த இஸ்ரவேல் மக்களின் இறுதி நாட்களில் ஏற்பட்ட துன்பகாலம் முதல் வனாந்தர வாழ்க்கையில் போது தேவனை ஆராதிப்பதற்கு ஆசாரிப்புக் கூடாரம் அமைக்கப்பட்டது வரையில் உள்ள சுமார் 145 ஆண்டு கால இஸ்ரவேலரின் வரலாற்றை விவரிக்கிறது.

இந்நூலை எழுதியவர் மோசே முனிவர். இதை மாத்திரமல்ல நியாயப்பிரமாணம் என்று அழைக்கப்படும் வேதாகமத்தின் முதல் ஐந்து நூல்களையும் எழுதியவர் மோசே தான் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. யாத் 17;14, 24;4, 34:27, மாற்கு 1:44, 12:26, யோவான் 7;19, 23 ஆகிய வசனங்கள் அவைகளில் சில.

**காலம் :-**

இந்நூல் இஸ்ரவேலரின் பாலைவனப் பயணத்தின் போது சுமார் கி.மு. 1876-க்கும் கி.மு. 1446-க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. காலத்தைப் பற்றி வேத அறிஞர்களுக்குள் கருத்துவேறுபாடு உண்டு. ஆயினும் அவைகள் வேத எழுத்துக்கள் கூறுகிற சத்தியத்தை மறுப்பதில்லை.

**நோக்கம் :-**

தேவன் ''விசுவாசிகளின் தந்தை ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை அந்தந்தக்கால கட்டத்தில் நிறைவேற்றுவேன் என்பதற்கு அடையாளமாக நாட்டைப் பற்றிய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்குமுன்னோடியாகவேஇவ்விடுதலைப்பயணத்தைத் துவக்கினார். எனினும் உரிய காலத்தில் மனுக்குல மீட்புக்காக

மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்புவார் (ஆதி 3 : 15) என்றும் மக்கள் விசுவாசிக்க வேண்டும் என்பதே முக்கிய நோக்கம், ஆயினும் அன்று வாழ்ந்த யூத மக்கள் அவ்வளவு தூரப்பார்வையுள்ளவர்களாக இருக்கவில்லை. அவர்களைப் பொறுத்த வரையில் நாடோடிகளாக அலைந்து திரிந்த தம்முடைய முன்னோர்களை அழைத்த தேவனாகிய யெகோவா, எகிப்து நாட்டுக்குக் கொண்டு வந்து திரளான மக்கள் கூட்டமாக பெருகப்பண்ணினார் என்றும், அதை எகிப்தியர்கள் கண்டு பொறாமைப்பட்டு, அவர்களைக் கொடுமைப்படுத்தின பொழுது, யெகோவா தம்முடைய பலத்த புயத்தினால் அவர்களை அற்புதமாக விடுதலையாக்கி கானான் தேசத்துக்கு அழைத்துச் சென்றார் என்று நம்பினர். இவ்வரலாற்று உண்மைகளை பின் சந்ததியார் அறிந்து போற்ற வேண்டும் என்ற அளவில் தான் அதை ஏற்றுக் கொண்டிருந்தனர்.

யாத்திராகமம் முழுவதிலும் உள்ள நிகழ்ச்சிகளைக் கீழ்வருமாறு பிரித்துக் கூறலாம்:

1. எகிப்தில் எபிரேயர் : அதி 1:1 - 12:36
    - (அ) எகிப்தில் கொடுமையின் ஆரம்பமும், கூக்குரலும் : அதி.1
    - (இ) மோசேயின் பிறப்பும், அழைப்பும். அதி 2-4
    - (இ) பார்வோனோடு போராட்டம் : அதி 5-11
    - (ஈ) பஸ்காவும் புறப்பாடும் : அதி 12:1-36
2. எகிப்திலிருந்து சீனாய் பயணத்தில் இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு
    - (அ) புறப்பாடு 12:37 - 15:21
    - (ஆ) சீனாய் பயணம் : 15:22 - அதி 17
    - (இ) எத்ரோவின் வருகை : அதி 18
3. சீனாய் மலையில் இஸ்ரவேலர்கள் அதி 19 - 40
    - (அ) நியாயப்பிரமாணம் கொடுக்கப்படல் : 19-24
    - (ஆ) கூடார அமைப்பின் மாதிரி வழங்கப்படல் : 25 - 31
    - (இ) இஸ்ரவேலரின் விக்கிரக ஆராதனை 32-34
    - (ஈ) கூடாரம் அமைக்கப்படல் 35 - 40

**யாத்திராகமத்தின் முக்கிய நிகழ்ச்சிகள்**

1. மோசேயின் பிறப்பும், பயிற்சியும் 2 : 1 - 10
2. கர்த்தருடைய பணியை மனித ஞானத்தால் செயல்படுத்தத் துணிதலும் அதன் தோல்வியும் - 2 : 11 - 15

3. மோசேயும், பற்றியெரிந்த முட்செடியும் - 3 : 1 - 22
4. பஸ்கா ஏற்பாடும் அதன் விபரமும் - அதி 12, 13
5. செங்கடல் பிளந்து வழிவிட்ட அதிசயம் - அதி 13
6. பத்துக்கட்டளைகள் - அதி 20
7. மோசேயும் மூப்பர்களும் - அதி 24
8. ஆரோனும் பொற் கன்றுக்குட்டியும் - அதி 32

**யாத்திராகமம் தருகிற சில தெய்வீகப் பேருண்மைகள்;**

(1) யோசேப்பின் செல்வாக்கினால் பார்வோனின் அன்பைப் பெற்று ஆரம்பத்தில் இஸ்ரவேலர் எகிப்தின் செழிப்பான நிலப்பகுதியில் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். ஆனால் ஒரு கால கட்டத்தில் கொடுமையின் இரும்புப் பிடியில் சிக்கித் தவித்தனர். சுகமாக வாழ்ந்த நாட்களில் தேவனை நினையாதிருந்த இஸ்ரவேலர் துன்பம் வந்த பொழுது கர்த்தரைப் பெருமூச்சுடன் கூப்பிட்டனர் (2:23) சகோதரர்களே! நாமும் கூட அப்படித்தான் சுகமாக வாழ்ந்து கொண்டு இருக்கும் நாட்களில் கடவுளை மறந்து விடுகிறோம். துன்பம், நோய், இழப்பு, தோல்வி என்று சோதனைகள் சூழ்ந்து கொள்ளும் போது வேதனை தாங்க முடியாமல் கூப்பாடு போடுகிறோம், வாழ்விலும், தாழ்விலும் எல்லாக் காலங்களிலுமே தேவனைத் துதிப்பதே உண்மை விசுவாசமும், பக்தியும் ஆகும். ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தேவனுடைய சித்தமில்லாமல் நம்முடைய வாழ்க்கையில் எதுவும் நேரிடுவதில்லை. (ரோமர் 8:28) ஒருவேளை அவ்விதமாக துன்பம் இஸ்ரவேலர்களுக்கு நேர்ந்திராவிட்டால் மோசேயின் ஆலோசனைக்கு இணங்கி எகிப்தை விட்டுப் புறப்பட்டிருப்பார்களோ என்பது சந்தேகமே!

அப்படி அவர்கள் புறப்பட விருப்பமற்றவர்களாக இருந்திருப்பார்களேயானால் வாக்குத்தந்தம் பண்ணப்பட்ட இன்பக் கானானைச் சுதந்தரித்தே இருக்க மாட்டார்கள்! அதே போன்று ஒரு சம்பவத்தைப் புதிய ஏற்பாட்டிலும் காணலாம். எருசலேமில் இருந்த கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக பெரும் கலவரம் தொடங்கியது. அதன் உச்சக்கட்டமாக ஸ்தேவானை கல்லெறிந்து கொன்றார்கள். வீடுகள் சூறையாடப்பட்டன. பெண்கள் என்றும், குழந்தைகள் என்றும் பாராமல் அடித்து, உதைத்து இம்சித்தனர். உடமைகள் கொள்ளையிடப்பட்டன வீடுகளையும், உடமைகளையும் இழந்த சபை மக்கள் உயிர் பிழைத்தால் போதும் என்று நாட்டை விட்டே ஓடிப்போனார்கள். அதனால் தேவன் தம்முடைய மக்களை காப்பாற்றவும், விடுவிக்கவும், திராணியற்றவர் என்று முடிவு கட்டி விடுவதா? இந்த துன்பங்களுக்குப் பின்னால் ஒரு தேவசித்தம்

மறைந்து நின்றதைப் பாருங்கள். இயேசு பரமேறின பொழுது சொன்ன வாக்கு நிறைவேறவே இப்படி நடந்தது. எருசலேமிலும், யூதாயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாக இருப்பீர்கள் என்றார் அல்லவா? (அப் 1 : 8) அப்படியானால் அவர்கள் எருசலேமில் மட்டும் சாட்சிகளாக இருந்து கொண்டிருந்த நிலையை மாற்றுவதற்கு தேவன் தெரிந்து கொண்ட உபத்திரவத்தின் வழி தான் மேற்சொன்ன துன்ப நிகழ்ச்சிகள். விளைவு? சிதறிப்போனவர்கள் எங்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் (அப் 8 : 4)

அதேபோல் நமக்கு நேரிடுகிற திடீர் இழப்பு, நோய், நெருக்கடிகள், தோல்வி ஆகிய யாவுமே நாம் தேவனிடத்தில் நெருங்கி வர ஏதுக்களாய் அமைகின்றன என்று எண்ண வேண்டும். ஒரு வேளை அவைகள் தேவன் நமக்காக ஆயத்தம் செய்திருக்கிற மேலான நிலைக்கு விட்டுச் செல்லுகின்ற நம்முடைய விசுவாசத்தைப் புடமிடுகின்ற உபத்திரவத்தின் குகைகளாக இருக்கலாமே, யாருக்குத் தெரியும்? சிறைச்சாலையிலிருந்து சிம்மாசனத்துக்கு உயர்த்தப்பட்ட யோசேப்பை நினைத்துக் கொள்ளுங்கள்.

(2) மோசே தன்னுடையநாற்பதாவது வயதில்தான்தேவனைத் தெரிந்து கொண்டார். (யாத் 2:11, அப் 7:23 எபி 11:24 - 27) ஆனால் தேவனோ நீண்ட நெடு நாளைக்கு முன்பே தெரிந்து கொண்டிருந்தார். இல்லாவிட்டால் பார்வோனின் கொடும் சிசு மரணத்துக்குத் தப்பி, கொலை செய்யச்சட்டமியற்றியவனின் அரண்மனையிலேயே வாழ்ந்திருக்க முடியுமா? ஆனால் மோசே தேவனைத் தெரிந்து கொண்டு வரும் வரையிலும் தேவன் பொறுத்திருந்தார். வேறு ஒரு விஷயத்தைக்கூட மோசே கற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. எகிப்தின் சகல சாஸ்திரங்களும் கற்பிக்கப்பட்டு வாக்கிலும், செய்கையிலும் வல்லவனாயிருந்தாலும். (அப் 7 : 23) இளமை மிடுக்கும், சமுதாயப் பற்றும் நிறைந்தவனாக இருந்தாலும் படுதோல்வியைச் சந்திக்க நேர்ந்தது. ஏன் நாட்டை விட்டே ஓடிப்போக நேரிட்டது. (யாத் 2 : 11 - 15) தேவன் மோசேயைத் தெரிந்து கொண்டார் என்பது உண்மையே. ஆனால் தேவனுடைய பணியை ஆவியானவரின் ஒத்தாசையில்லாமல் மனித ஞானத்தைக் கொண்டு செய்ய முயற்சிப்பது தோல்வியையே கொடுக்கும் என்பதற்கு சிறந்த சான்றுதான் மோசேயின் தோல்வி. ஜெபமும், ஆயத்தமும், ஆவியானவரின் ஒத்தாசையுமில்லாமல் இறைப்பணியில் வெற்றி காண்பது இயலாத காரியம்.

(3) இந்நிகழ்ச்சி நடந்து நாற்பது ஆண்டுகள் ஓடி மறைந்தன. மீதியான் பாலைவனத்தில் தேவன் முட்செடியிலே மோசேக்கு

தரிசனமாகி, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் மோசே செய்ய விரும்பின பணிக்கு வரும்படி அழைத்தார். என்ன மாற்றம்! எத்தனை சாக்குப் போக்குகள். காரணம் என்ன? நாற்பது ஆண்டுகள் பாலைவனப் பல்கலைக் கழகத்தில் ''மௌனம்'' என்னும் சிறப்புப்பாடம் எடுத்துப் படித்த அனுபவமா? ஆம், நாற்பது ஆண்டுகள் ஆடுகளின் பின்னே திரிந்து தனிமையில் தேவனோடு சஞ்சரித்து, தான் கற்றவைகளையெல்லாம் அசைபோட்டு ஜீரணித்து அனுபவம் பெற்றுவிட்டார். எந்தப் பணியையு தன் புயபலத்தைக் கொண்டும், உலக ஞானத்தைக் கொண்டும் செய்ய முடியும் என்று இறுமாந்து நம்பினவரோ அதே காரியத்தைச் செய்யும்படி தேவனே அழைத்த பிறகும் தயங்குகிறார். சாக்குப் போக்குச் சொல்லுகிறார். (யாத் 3 : 1 - 4 : 47) இதை வாசிக்கும் இளைஞர்களே! இதை நீங்கள் நன்றாகச்சிந்தித்துப் பாருங்கள். தேவனுடைய ஊழியத்தைச்செய்ய முற்படும் போது ஆர்வம், கல்வி, திறமை ஆகியவைகள் மட்டும் போதும் என்று களம் புகாமல் ஆவியானவருடைய ஒத்தாசையும் இருக்கிறதா? என்று சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளாமல் சத்துருவாகிய சாத்தானை எதிர்த்துப் போராடி வெற்றி பெறவே முடியாது. (எபே 6 : 11 - 16)

E. Z. செல்வநாயகம்

## வேதாகமத்திலேயே பெரிய அதிகாரம்

**119-ம் சங்கீதம்**

இதை எழுதியவர் : ஆலெப் இதில் 176 வசனங்கள் உள்ளன.

''உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது'' வசனம் : 105

என்பது போன்ற சிறந்த வசனங்கள் உள்ளன. வாசித்து வழி நடப்பீர்!

# தெரிந்து கொள்ளுங்கள்

## எபிரேயர்களின் மாதங்கள், பண்டிகைகள் / கால நிலைகள்

| எபிரேய மாதம் | ஆங்கில மாதம் | பண்டிகைகள் | கால நிலைகள் |
|---|---|---|---|
| 1 ஆபீப் (அ) நிஸான் யாத் 23 : 15, யாத் 13 : 14 நெகே 2 : 1 | மார்ச்/ஏப்ரல் | 14ம் தேதி பஸ்கா 15-21ம் தேதி புளிப்பில்லாத அப்பப் பண்டிகை | பின்மாரி, யோர் தானில் வெள்ளப்பெருக்கு சமவெளியில் பார்லி அறுவடை ஆரம்பம் |
| 2. சீப் 1 ராஜா 6 : 1, 3 : 7 | ஏப்ரல்/மே | 14ம் தேதி முறையான காலத்தில் பஸ்காவை ஆசரிக்க முடியாதவர்கள் பஸ்கா கொண்டாடல் நெகே 9 : 10 - 11 | அத்திப்பழ முன் அறுவடை; மலை நாடுகளில் பார்லி அறுவடை |
| 3. சீவான் எஸ்தர் 8:9 | மே/ஜுன் | 6ம் தேதி வாரங்களில் பண்டிகை (அ) பெந்தே கொஸ்தே பண்டிகை | கோதுமை அறுவடை |
| 4. தம்முஸ் சகரியா 8 : 19 இதைப்பற்றி வேதாகமத்தில் குறிப்பு இல்லை | ஜுன்/ஜுலை | — | வறண்ட காலம் ஏப்ரல் பிற்பகுதியிலிருந்து அக்டோபர் வரை திராட்சை கனி கொடுக்கும் காலம் |

| | | | |
|---|---|---|---|
| 5. அப்<br>இதைப் பற்றி வேதாகமத்தில் குறிப்பு இல்லை | ஜூலை/ஆகஸ்ட் | — | சமவெளிகளில் அறுவடைப்பவன் கிடைக்கும் காலம் |
| 6. எலூல்: நெகே 6 : 15 | ஆகஸ்ட்/செப்டம்பர் | — | திராட்ச சேர்ப்புக் காலம், கோடை அத்தி பலன் |
| 7. எத்தானீம்<br>1. ராஜா 8 : 2 | செப்டம்பர்/அக்டோபர் | 1ம் தேதி எக்காளப் பண்டிகை, 10ம் தேதி கூடாரப் பண்டிகை<br>15-22 பாவநிவாரணநாள் | மாதுளைப் பலன் முன் மாரி தொடக்கம் |
| 8. பல் : 1. ராஜா 6 : 38 | அக்டோபர்/நவம்பர் | — | வடகலிலேயாவில் ஒலிவப்பலன், பார்லி கோதுமை விதைப்புக் காலம் |
| 9. கிஸ்லேயு<br>நெகே 1 : 1, சகரியா 7:1 | நவம்பர்/டிசம்பர் | 25ம் தேதி தேவாலயப் பிரதிஷ்டைப்பண்டிகை | — |
| 10. தேபேத் : எஸ்தர் 2 : 16 | டிசம்பர்/ஜனவரி | — | — |
| 11. சேபாத் : சகரியாக 1 : 7 | ஜனவரி/பிப்ரவரி | — | — |
| 12. ஆதார் : எஸ்ரு 6 : 15<br>எஸ் : 3 : 7 | பிப்ரவரி/மார்ச் | 14, 15 பரிம் பண்டிகை | சமவெளியில் ஆரஞ்சு, எலுமிச்சை பலன்கள் வாதுமை மரம் பப்பத்தல் |

# பரிசுத்த வேதாகமத்தை ஏன் தினமும் வாசித்துத் தியானிக்க வேண்டும்?

ஏனெனில் அதில் அடங்கியுள்ள செய்திகள் முழுவதும் நம்பகமானவை; காலத்தால் அழிந்து போகாமல் நிலைத்திருப்பவை.

''மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவும் இருக்கிறது. புல் உலர்ந்தது, அதன் பூவும் உதிர்ந்தது ஆனால் கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.'' 1பேது 1:24,25

கர்த்தருடைய வார்த்தை சத்தியமும் அவருடைய செய்கைகள் உத்தமமுமாயிருக்கியது அப் 33:4

**ஏனெனில் அவைகள் தேவ ஆவியினால் அருளப்பட்டவைகள்**

வேத வாக்கியங்களொல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,

அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் ப்டிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது 2தீமோ 3:16,17. பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நல்லது.

தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாக வில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். 2 பேதுரு 1;19, 21

**ஏனெனில், நித்தில் ஜீவனுக்கு அது வழி காட்டுகிறது**

பரிசுத்த வேத எழுத்துக்கள், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்குகிறது. (2 தீமோ 3:15)

நாம்மனுஷருடையசாட்சியைஏற்றுக்கொள்ளுகிறோம்.தேவனுடைய சாட்சி அதைக் காட்டிலும் சிறந்ததாக இருக்கிறது; தேவன் தமது குமாரனைக் குறித்துக் கொடுத்த சாட்சி என்னவெனில் தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்த சாட்சி-

யைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான். தேவனை விசுவாசியாத தவனோ, தேவன் தம்முடைய குமாரனைக் குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசியாததனால், அவரைப் பொய்யனாக்குகிறுன். தேவன் கொடுத்த சாட்சி இதுவே. தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்த சாட்சியாம்.

குமாரனை உடையவன் ஜீவனையுடையவன். தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன் 1 யோவான் 5:9-12

தேவன் உலகத்தை அதிகமாக நேசித்தபடியால் தம்முடைய ஒரே பேறுன குமாரனைத் தந்தருளி அவரை விசுவாசிக்கிற ஒருவனும் கெட்டுப்போகாதபடி நித்திய ஜீவனை அடையும்படி திட்டமிட்டார்.

தேவன் தம்முடைய குமாரனை, உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும் படி அனுப்பமால் அவராலே உலகம் இரட்சிக்கப்பட வேண்டும் என்றே அனுப்பினார்.

அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். அவரை விசுவாசியாதவன் ஏற்கனவே ஆக்கினை அடைந்தாயிற்று. ஏனெனில் ஏதவனுடைய ஒரே பேறுன குமாரனை அவன் விசுவாசிக்கவில்லை. (யோவான் 3:16-18)

**ஏனெனில் இயேசு கீழ்வரும் பேருண்மைகளை மொழிந்திருக்கிறார்**

''மனுஷன் அப்பத்தினாலே, மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் ஏற்று எழுதி இருக்கிறதே'' மத் 4:4

என்வனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு அவன் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குப்பட்டிருக்கிறான் யோவான் 5:24

நான் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேன் என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்.

நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள், சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும். பாவச் செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாக இருக்கிறான். ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலை ஆவீர்கள் யோவான் 8:12,31,32,34,36.

வானமும் பூமியும் ஒழிந்து போகும்: என்னுடைய வார்த்தைகளோ அழிந்து போவதில்லை. மாறிரு 13 : 81

**5 ஏனெனில் வேதாகமத்தில் நாம் கீழ்க்கண்ட நற்பண்புகளைப் பார்க்கிறோம்,**

**(அ) மன்னிப்பு :**

சூயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினலே **பாவமான்னிப்பை** பெறுவான் என்று

தீர்க்கதரிசிகள் எல்லோரும் அவரைக் குறித்தே காட்சி கொடுக்கிறார்
கள் அப் 10 : 43

**(ஆ) தேவனன்பு :**

நாம் பிழைக்கும்-
தம்முடைய ஒரே பேறான குமாரனாலே தேவன்
படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால்
நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.

அவர்
நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல
நம்மிடத்தில் அன்பு கூர்ந்து. நம்முடைய பாவங்களை நிவர்த்தி
செய்கிற கிருபதாரர் பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்-
பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.

அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே
அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம், (1யோவான் 3:16)

**(இ) சமாதானம் :**

கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன்; அவர் தம்
முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும்
**சமாதானம்** கூறுவார் சங் 85:8

ஒழுக்கமுள்ளவைகள்
உண்மையுள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவை
எவைகளோ, நீதிஉள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகள்
களோ, அன்புள்ளவைகள் எவைகளோ, அவைகளையே சிந்தித்துக்
எவைகளோ புண்ணியம் புகழ் எதுவோ அடைந்தும்
கொண்டிருங்கள். நீங்கள் என்னிடத்தில் கற்றும், அவைகளையே
கேட்டும், கண்டும் இருக்கிறவைகளெவைகளோ உங்க-
செய்யுங்கள், அப்பொழுது **சமாதானத்தின்** தேவன்
ளோடிருப்பார் பிலி 4,8:9

**(ஈ) நிச்சயமான நம்பிக்கை**

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும்,
தேவ குமாரனுடைய திட்டத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்-
கவும், தேவ குமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிற
உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன். 1 யோவான் 5:13

தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும்,
ஆறுதலினாலும் நாம் **நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு**
முன்பு எழுதியிருக்கிறவைகள் எல்லாம் நமக்குப் போதனையாக
எழுதியிருக்கிறது. ரோமர் 15:4

**(உ) தூய்மை**

வாலிபன் தன் வழியை எதினாலே சுத்தம் பண்ணுவான்?
உம்து வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால்
தானே சங் 119:9

**(ஊ) வாழ்வின் ஒளிவிளக்கு**

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என்
பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது சங் 119:105

**(எ) பாக்கியம் (பேறு)**

தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக் கொள்
கிறவர்களே அதிகபாக்கியவான்கள் (பேறுபெற்றவர்கள்) லூக்11 2:8

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi -110049.
Thursdays-7: 15 to 7-30 P. M.
Fridays-- 8: 00 to 8:15 P. M.
Saturdays-8 00 to 8:15 P. M.
Sundays-9 00 to -9: 15 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## திருமறை ஆசான் வாசகர்களே வணக்கம்

ஜெபியுங்கள் ! பங்கு கொள்ளுங்கள் !!

## திருமறை ஆசான் நான்காவது ஆண்டு துவக்க விழா மற்றும் கருத்தரங்கம்

எதிர்வரும் 1991 ஜனவரித் திங்கள் திருச்சி மாநகரில் நடைபெற உள்ளது தேதியும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும் நாடெங்கிலும் இருந்தும் வாசகர்கள் வருகை தர இருக்கிறார்கள். பங்கு கொள்ள விரும்புவோருக்கு மட்டும் தனித் தபாலில், தேதி, இடம் மற்றும் நிகழ்ச்சி நிரலோடு அழைப்பிதழ் அனுப்பப்படும்.

அனைத்து வாசகர்களும் விழாவில் பங்கேற்று, இதழின் மேம்பாட்டுக்கான ஆலோசனைகளை நல்கவும், ஊக்குவிக்கும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.


ஆசிரியர் மற்றும் விழாக்குழுவினர்

தொடர்பு முகவரி (ஜனவரி 10ம் தேதி வரை)
**E.Z. செல்வநாயகம்**
*2, மணல்மேடு வீதி,*
*ஈரோடு 638 002.*

PRINTED MATTER BOOK-POST

TO

To MR. J. C. CHOATE
P.O. BOX 3815
NEW DELHI 110049



If undelivered please return to :
The Editor
**THIRUMARAI AASAAN**
Post Box No: 58 ERODE - 638 001.